# கூட்டாண்மை – கடன்கள்

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள நிதிசார் நுகர்வோர் பாதுகாப்பு வழிகாட்டல்களின் பிரகாரம், SDB வங்கியிடமிருந்து நீங்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய, உங்களுக்கு பொருத்தமான மற்றும் அவசியமான வங்கியியல் தீர்வுகள் மற்றும் சேவைகளை தெரிவு செய்து கொள்வதற்கு உங்களுக்கு உதவும் வகையில் பிரதான தரவு ஆவணங்கள் (KFDs) தொடரை நாம் தயார்ப்படுத்தியுள்ளோம். தனிப்பட்ட பாவனைக்கு பயன்படுத்தக்கூடிய கணக்குகளுடன் தொடர்புடைய விசேட பக்கேஜ்கள் அடங்கலாக பல்வேறு இலங்கை ரூபாய் கணக்கு வகைகள் பற்றிய மேலோட்டமான அம்சங்கள் இந்த KFD இனால் வழங்கப்படுகின்றது. எவ்வாறாயினும், இந்த KFD இல் வழங்கப்பட்டுள்ள தகவல்கள், சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் மாற்றங்களின் பிரகாரமும், வங்கியின் கொள்கைகள் மற்றும் விதிமுறைகளில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களின் பிரகாரமும் மெருகேற்றம் செய்யப்பட வேண்டும் என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளவும். உங்களுக்கு மேலதிக தகவல்கள் தேவைப்பட்டால் எமது 24 மணி நேர அழைப்பு நிலைய இலக்கமான 011 5 411 411 உடன் தொடர்பு கொள்ளவும், அல்லது www.sdb.lk எனும் இணையத்தளத்தைப் பார்வையிடவும். உங்கள் கணக்குகள் பற்றி ஏதேனும் முறைப்பாடுகளை கொண்டிருந்தால், முறைப்பாட்டுடன் சுருக்கமான எழுத்துமூல அறிக்கையை, முறைப்பாடுகள் தீர்க்கும் அதிகாரி, SDB வங்கி பிஎல்சி, எட்மன்ட்ன் வீதி, கிருலப்பனை, கொழும்பு 6 எனும் முகவரிக்கு அனுப்பவும் அல்லது [+94(0) 11 5 411 411] எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது [customercare@sdb.lk] எனும் மின்னஞ்சல் முகவரியினூடாக தொடர்பு கொள்ளவும், நாம் பொருத்தமான வகையில் பதிலளிப்போம்.

| கணக்கின விளக்கம் | வாடிக்கையாளர்களுக்கான அனுகூலங்கள் | வட்டி வீதத்தின் வகை | கட்டண மீளாய்வு காலம் | கட்டணங்கள் மற்றும் இதர வங்கி கட்டணங்கள் வகைகள் | கணக்கை ஆரம்பிப்பதற்கு பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகள் (தகைமை / தேவையான ஆவணங்கள் /எவ்வாறு விண்ணப்பிப்பது) | பிரதான நியதிகள் மற்றும நிபந்தனைகள |
|---|---|---|---|---|---|---|
| | 1. இலங்கை மத்திய வங்கி மீள்நிதியளிப்பு திட்டத்தினூடாக குறைந்த வட்டி வீதங்களில் கடன்களைப் பெறல் | மீள்நிதியளிப்பு – நிலையானது | 1. மீள்நிதியளிப்பு – CBSL வழிகாட்டல்களின் பிரகாரம் | 1. காகிதாதிகள் கட்டணங்கள் | 1. கூட்டுறவு சங்கங்கள், விவசாயிகள் சங்கங்கள் போன்ற சட்டபூர்வ நபர்களைக் கொண்ட எந்தவொரு சங்கத்துக்கும் ஞுனுடீ வங்கியிடமிருந்து கடனுக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமை வழங்கப்படும். கடன் கோவையுடன், சம்பந்தப்பட்டட அதிகார அமைப்பினால் வழங்கப்பட்ட பதிவு சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட பிரதி இணைக்கப்பட வேண்டும். | |
| | 2. மீள கடன் வழங்கலினூடாக எல்லையளவு இலாபத்தை திரட்டுவதற்கான ஆற்றல் | சொந்த நிதிகள் - மிதப்பு/நிலையானது | 2. சொந்த நிதிகள் - மாதாந்தம் | 2. CRIB கட்டணங்கள | 2. வங்கியினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய முறையில் சங்கத்தின் கணக்குகள் பேணப்பட வேண்டும். நிதி அறிக்கைகளுக்கு மேலதிகமாக, பணப் பாய்ச்சல் அறிக்கைகள், பணப் புத்தகங்கள், பிரத்தியேக கணக்குப் புத்தகங்கள் மற்றும் பொது கணக்குப் புத்தகங்கள் போன்றன தொடர்பில் மதிப்பாய்வு அதிகாரி திருப்தியடைந்திருக்க வேண்டும். மதிப்பாய்வு அதிகாரியின் கண்காணிப்பில இந்த விடயம் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். | |
| | 3. சங்க ஐந்தொகையை குறிப்பிடத்தக்களவு பெறுமதியினால் அதிகரித்துக கொள்வதற்கான வாய்ப்பு | | | | 3. சங்கத்தின் கொடுகடன் தகவல் பணியகத்தின் அறிக்கை வங்கியின் கடன் கொள்கையின் பிரகாரம் ஏற்றுக கொள்ளத்தக்கதாக இருத்தல் வேண்டும். | |
| | 4. அங்கத்துவ வைப்பை பயன்படுத்தாமல் புதிய திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஆற்றல் | | | | 4. இந்தக் குறிப்புகளுடன், கடந்த 3 நிதியாண்டுகளுக்கான நிதிசார அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் ஆகக்குறைந்தது ஒரு வருடத்துக்கேனும் கூட்டுறவு திணைக்களத்தினால் அது கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டிருப்பதுடன், கடந்த 2 வருடங்களுக்கு சங்கத்தினால் கணக்குகள் மீளாய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்வதற்கு, உறுதிப்படுத்தும் ஆவணங்களை சங்கம் சமர்ப்பிக்க வேண்டும் (குறிப்பு புத்தகப் பதிவு போன்றவற்றின் சான்றளிக்கப்பட்ட பிரதி).* | |
| | 5. சங்கத்தின் திரள்வுத்தன்மையை சேமித்துக் கொள்வதற்கான ஆற்றல் | | | | சுமார் 3 வருடங்களுக்குள் கணக்குமீளாய்வு மேற்கொள்ளப்படவில்லையாயின், பின்வரும குறிப்புகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்** | |
| | | | | | a. சங்கத்தினால் சம்பந்தப்பட்ட கணக்குகள் மீளாய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பதை குறிக்கும் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட உறுதிப்படுத்தல் அல்லது கூட்டுறளவு திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் மீளாய்வுக்காக சங்கத்துக்கு விஜயம் செய்திருந்தமையை உறுதிப்படுத்தல். அல்லது | |
| | | | | | b. வங்கியினால் ஏற்றுக் கொள்ளத்தக்க கணக்கு மீளாய்வு நிறுவனம்/ கணக்காளரினால் கணக்காய்வு கருத்தறிக்கை அல்லது கணக்காய்வு அறிக்கைகளை சமர்ப்பித்தல். | |
| கூட்டாண்மை கடன்கள் | | | | பின்வரும் விடயங்கள் தொடர்பில் மேலதிக தகவல்களுக்கு ஆவணத்தை பார்க்கவும் | 5. கணக்காய்வு அறிக்கை பாரதூரமான கருத்துகளைக் கொண்டிருக்கக்கூடாது என்பதுடன், அவ்வாறு ஏதேனும் காணப்பட்டால்: SDB இனால் ஏற்றுக் கொள்ளக்கூடிய சீராக்கல் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 1. கடன்கள் கட்டம் கட்டமானதாக அமைந்திருக்கும் என்பதுடன் ஒவ்வொரு கட்டத்திலும் விடுவிப்பதற்கு முன்னதாக கிளை முகாமையாளரினால், முன்னைய நிலையில் வழங்கப்பட்ட தொகை முறையாக பயன்படுத்தப்பட்டிருப்பதை உறுதி செய்யப்பட வேண்டும்.<br><br>3. கணக்காய்வு அறிக்கையில் காணப்படும் குறைபாடுகள சீராக்கப்பட்டிருக்க வேண்டும். |
| | | | | | 6. கடனுக்கு விண்ணப்பிக்கும் போது நிதியாண்டு நிறைவடைந்து 6 மாதங்கள் கடந்திருந்தால், அக்காலப்பகுதிக்கான நிதி அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். வங்கியினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் கணக்காய்வுக்குட்படுத்தப்படாத கணக்குகள் தயார்ப்படுத்தப்பட்டிருப்பதுடன், சங்கத்தின அங்கிகாரம் பெற்ற அதிகாரிகளால் சான்றளிக்கப்பட்டிருக்க வேண்டும். *** | |
| | | | | | 7. NPL விகிதம் 10% க்கு குறைவானதாக அல்லது அதற்கு நிகரானதாக அமைந்திருப்பதுடன், விவரமான NPL அறிக்கை சங்கத்தினால் வழங்கப்பட வேண்டும். | |
| | | | | | 8. பணிப்பாளர் சபை அங்கத்தவர்களால் பெற்றுக் கொண்ட கடன்கள் நிலுவைத் திகதி கடந்தும் செலுத்தப்படாமல் இருக்கக்கூடாது மற்றும் சங்கத்திடமிருந்து குழுவினால் பெற்றுக் கொண்ட கடன்கள தொகை மொத்த கடன் மீதியின் 20%ஐ விட அதிகரிக்கக்கூடாது. | |
| | | | | | 9. பிரேரிக்கப்படும் வசதிக்கான கடன் பெறுநர்களாக கருதப்படும் அங்கத்தவர்களால், கடனுக்கு விண்ணப்பிக்கையில், அவர்கள் ஏற்கனவே பெற்றுக் கொண்ட கடன் தொகை நிலுவைத் திகதி கடந்தும் செலுத்தப்படாத நிலையில் காணப்படக்கூடாது. | |
| | | | | | 10. அங்கத்தவர்களுக்கு கடன் வழங்கும் போது, ஒரு அங்கத்தவருக்கு வழங்கக்கூடிய அதிகூடிய கடன் தொகை என்பது, தனிநபர் ஆகக்கூடிய கடன் தொகை எல்லையை விட குறைவு அல்லது அண்மையில் சங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட சங்கத்தின் ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ள கடன தொகையின் 5% வரையான ஆகக்கூடிய பிரத்தியேக கடன் எல்லையாகும். தனிநபர் உத்தரவாதத்துக்கு அப்பால் எல்லைப் பெறுமதியை பெற்றுக் கொளவதற்காக சொத்து அடைமானம் ஒன்றை பெற்றுக் கொள்ள முடியுமா என்பதை மதிப்பாய்வு அதிகாரி உறுதி செய்ய வேண்டும். சட்ட ரீதியில் ஏற்றுக் கொள்ளத்தக்க சான்றளிக்கப்பட்ட பிரதி, கடன் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். குறிப்பாக, ஐஆஊடு மூமூ பற்றி சட்டபூர்வமான நிலையில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| | | | | | 11. சங்கத்தின் உள்ளக கட்டுப்பாடு என்பது, வங்கியினால் ஏற்றுக் கொள்ளத்தக்க நிலையில் காணப்பட வேண்டும்.<br>a. மாதாந்தம் பணிப்பாளர் சபை சந்திப்புகள் முன்னெடுக்கப்படல். | |
| | | | | | b. சங்கத்திடம் பாதுகாப்பான உரித்துடைமையை கொண்டிருத்தல். | |
| | | | | | c. கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் இரட்டை கட்டுப்பாட்டை கொண்டிருத்தல். | |
| | | | | | d. பணிப்பாளர் சபையினால் ஊழியர்கள தொடர்பில் முறையான கண்காணிப்பு காணப்படல். | |
| | | | | | * கூட்டுறவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்காத, உடனடி முழு ஆண்டுக்குமான சங்கத்தின் நிதிக் கணக்குகள், ஏற்றுக் கொள்ளக்கூடிய கணக்காய்வு நிறுவனத்தினால் கணக்காய்வுக்குட்படுத்தப்பட வேண்டும். | |
| | | | | | ** கூட்டுறவுகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கு மாத்திரம் பொருந்தும். | |
| | | | | | *** நிதியாண்டிலிருந்து 6 மாதங்களுக்கு அப்பாற்பட்ட கணக்குகளை கொண்டிருக்கும், கூட்டுறவு சட்டத்தில் பதிவு செய்யப்படாத சங்கங்களுக்கு,மாதாந்த அடிப்படையிலான கணக்கு சாராம்சத்தை வழங்குவது போதுமானதாகும். | |
| | சங்கத்தின் தேவைகளுக்காக கடன்களை இலகுவாக அணுகிக் கொள்ளும் வசதி | | | | | மாதாந்த வட்டியில் பெறப்படும் நிலையான வைப்புகளில் – நிலையான வைப்பு பெறுமதியின் 80% |
| பண எல்லை – வருடாந்த கொடுப்பனவுகள் | சங்கத்தின் தேவைகளுக்காக கடன்களை இலகுவாக அணுகிக் கொள்ளும் வசதி<br><br>சங்கத்தின் ஐந்தொகையில் தாக்கத்தை ஏற்படுத்தாது கடன் தொகையை மீளச் செலுத்தக்கூடியதாக இருத்தல் | நிலையானது | 3. மாதாந்தம் | காகிதாதிகள் கட்டணங்கள் | வங்கியில் நிலையான வைப்பைக் கொண்டிருத்தல் | வருடாந்த வட்டியில் பெறப்படும் நிலையான வைப்புகளில் – நிலையான வைப்பு பெறுமதியின் 90% |

SDB வங்கி

#உங்களைமதிக்கும்

சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ. இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ [lka] , Reg. No: PB62PQ